### என்எஸ்எஸ் சார்பில்

# ராணி அண்ணா கல்லூரியில் நல்வாழ்வு விழிப்புணர்வு முகாம்

பேட்டை, ஜன. 24: பேட்டை ராணி அண்ணா மகளிர் கல்லூரியில் நாட்டு நலப்பணி திட்டம் சார்பில் நல்வாழ்வு விழிப்புணர்வு முகாம் நடந்தது.

பேட்டை ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரியில் நாட்டு நலப்பணி திட்டம் சார்பில் மாணவிகள் நலமுடன் வாழ்வதற்கான பொது விழிப்புணர்வு முகாம் நடந்தது. கல்லூரி முதல்வர் மைதிலி தலைமை வகித்தார். பேராசிரியை ஆனந்த லட்சுமி வரவேற்றார்.




▶ பேட்டை ராணி அண்ணா மகளிர் கல்லூரியில் நடந்த விழிப்புணர்வு முகாமில் கல்லூரி முதல்வர் மைதிலி பேசினார்.

இதில் பங்கேற்ற மாணவிகளுக்கு பாளை அன்னை வேளாங்கண்ணி மருத்துவமனை மருத்துவர்கள் ஜோசப், செல்வன் ஆகியோர் நலமுடன் வாழ்வதற்கான வழிமுறைகளை விளக்கிப்பேசினர். நிகழ்ச்சிகளை பேராசிரியை உமாதேவி தொகுத்து வழங்கினார்.

பேராசிரியை கலா கோபி நன்றி கூறினார்.

ஏற்பாடுகளை நாட்டு நலப்பணி திட்ட ஒருங்கிணைப்பாளர்களான மாணவிகள் செய்திருந்தனர்.